செ.வெ.எண்.66 நாள்.28.12.2017.

## தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம், திருநெல்வேலி மாவட்டம்
## பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் நரிக்குறவர்கள் மற்றும் காட்டு நாயக்கர் போன்ற பின்தங்கிய சமுதாயத்தை சேர்ந்த குடும்பங்களின் குழந்தைகளை கல்வி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் **“Project Spark – Inspire & Ignite”** திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் குழந்தை தொழிலாளர் சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களின் மனநிலையை ஊக்கப்படுத்தி சிறப்பாக கல்வி பயிலும் நிலையை உருவாக்கிடும் வகையில் அரசு உயர் அதிகாரிகள், தொழில் வல்லுனர்களுடன் ஒரு நாள் நிகழ்வில் உடன் அழைத்து சென்று அரசு அலுவலர்கள் மற்றும் அவர்களின் பணிகளை நேரில் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**“Project Spark – Inspire & Ignite”** திட்டத்தின் முக்கிய நோக்கம் தாங்களும், இச்சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எட்ட வேண்டும் என்ற எண்ணத்தினை குழந்தைகளுக்கு ஏற்படுத்துவதே ஆகும். இதன் மூலம் சமுதாயத்தின் நலிவடைந்த குழந்தைகளும் மிக உயர்ந்த நிலைக்கு வருவதற்கு வாய்ப்பாக அமையும்.

**“Project Spark – Inspire & Ignite”** திட்டத்தினை துவக்கி வைக்கும் முகமாக 13.10.2017-அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்களுடன் பேட்டை, நரிக்குறவர் காலனி சிறப்புப் பயிற்சி மைய மாணவ, மாணவியர்கள் ஒரு நாள் நிகழ்வில் கலந்து கொண்டனர். அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் அமர்ந்து அரசு திட்டங்கள், பணிகள் குறித்து தெரிந்து கொண்டனர். மேலும், கீழநத்தம் ஊராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தூய்மை பணிகள் ஆய்வு, ரெட்டியார்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற உலக கைகழுவும் தின நிகழ்ச்சி ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

**“Project Spark – Inspire & Ignite”** திட்டத்தின் தொடர்ச்சியாக 22.12.17-அன்று ஆலங்குளம் சிறப்புப் பயிற்சி மைய மாணவ, மாணவிகள் திருநெல்வேலி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு செயலாளர் மற்றும் சார்பு நீதிபதி திரு. ராமலிங்கம் அவர்களுடன் ஒரு நாள் நிகழ்வில் கலந்து கொண்டு அலுவலகப் பணிகளை பார்வையிட்டதுடன், நீதிமன்ற நிகழ்வுகளையும் பார்வையிட்டனர். பல்வேறு வழக்கறிஞர்களுடனும் கலந்துரையாடினார்கள். பின்னர் நீதிபதி அவர்களுடன் மதிய உணவருந்தினார்கள். பிற்பகலில் நீதிபதி அவர்களுடன் சட்டக் கல்லூரி மாணவர்களின் பயிற்சி வகுப்பிலும் கலந்து கொண்டனர். மாவட்ட முதன்மை நீதிபதி திரு. ராஜசேகர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு புத்தாடைகள் வழங்கி கல்வியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்கள்.

தொடர்ந்து இத்திட்டத்தின் கீழ் காவல் கண்காணிப்பாளர், மருத்துவர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் அழைத்து செல்லப்பட்டு ஊக்கப்படுத்தப்படவுள்ளனர்.

வெளியிடு :செய்திமக்கள்தொடர்புஅலுவலகம், திருநெல்வேலி.